Registered No. M-1.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

II-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்.

SUPPLEMENT TO PART II OF THE FORT ST. GEORGE GAZETTE

FEBRUARY 1, 1938.

நெ. 5.] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1938-ம் ௵ பிப்ரவரி ௴ 1௳. [PRICE, 6 *pies*.

1938-ம் ௵ ஜனவரி ௴ 18௳ போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜட் II-வது பாகத்தின் ஸப்ளிமென்ட் 1-வது பக்கத்திலிருந்து 3-வது பக்கம் வரையில் பிரசுரிக்கப்பட்ட மதராஸ் கலெக்டர் 1938-ம் ௵ ஜனவரி ௴ 11௳ நோட்டீஸுக்கு பதிலாக கீழ் கண்ட நோட்டீஸ் பிரசுரிக்கப்படுகிறது.

1938-39-ம் ௵த்திற்காக மதராஸ் டவுனிலுள்ள ஆப்காரி, அபினி சுதந்தரங்களை விற்பனை பண்ணுவதைப் பற்றிய நோட்டீஸ்.

1938-ம் ௵ எப்ரல் ௴ 1௳ முதல் 1939-ம் ௵ மார்ச் ௴ 31௳யுடன் முடிவாகிற இஜாராவுக்கு மதராஸ் டவுனிலுள்ள அடியில் கண்டிருக்கும் கஞ்சா, அபினிக் கடைகள் மதராஸ் கலெக்டரவர்களால் அவர்களுடைய ஆபிஸில் 1938-ம் ௵ பிப்ரவரி ௴ 18௳ வெள்ளிக்கிழமை பகல் 12-மணி முதல் ஏலம் போடப்படும். அடியில் கண்டிருக்கும் பட்டை சாராயக்கடைகளும், டாவரன்களும், கீழே குறிப்பிட்டிருக்கும் விசேஷ திட்டங்களுக்கு உட்பட்டும் ஒரு வகை செய்யப்படும்.

ஷெட்யூல் I.—பட்டை சாராயக்கடைகள்.

கடை நெம்பர்.	எல்லைகள்.
1	புது வண்ணாரப்பேட்டை—திருவொற்றியூர் ஐரோட் எந்த பக்கத்திலாவது ; வடக்கே இந்த ரோட்டையும் அருணசலேஸ்வரர்கோவில் தெருவையும் சேர்க்கிற குறுக்கு ரோட்டிற்கும் ; தெற்கில் அருணசலேஸ்வரர் கோவில் தெருவும் திருவொற்றியூர் ரோட்டும் சந்திக்குமிடத்திற்கும் மத்தியிலுள்ள இடத்தில்.
2	இராயபுரம்—மன்னார்சாமி கோவில் தெரு ; வடக்கில் போலீஸ் ஸ்டேஷனுக்கும், தெற்கில் 'B' பம்பிங் ஸ்டேஷன் தெருவிற்கும் மத்தியில் ; அல்லது ஆதம் சாயபு தெருவு ; வடக்கில் கல்மண்டபம் ரோடு ; தெற்கில் பம்பிங் ஸ்டேஷன் தெருவிற்கும் மத்தியில்.
3	பழய வண்ணாரப்பேட்டை—வடக்கில் வெங்கிடகிருஷ்ணன் தெரு, கிழக்கில் மேற்கத்திய சிமிட்டரி ரோட், மேற்கே திருவொற்றியூர் ஐரோட், தெற்கே சிமிட்டரி ரோட், இதன் மத்தியிலுள்ள இடத்தில்.
4*	பெரம்பூர்—பெரம்பூர் ஐரோட் ; கிழக்கே பெரம்பூர் ஐரோட் ரெயில் ரோட்டை சந்திக்கு மிடத்திற்கும், மேற்கே டோல்கேட்டுக்கும் மத்தியில்.
5	ஜார்ஜு டவுன்—சாலை விநாயகர் கோவில் தெரு ; கிழக்கில் இராமசாமி தெருவிற்கும், மேற்கில் பிராட்வேயுக்கும் மத்தியில், சாலை விநாயகர் கோவில் தெருவில் வாசற்படி இருக்கக்கூடாது.
6	ஜார்ஜு டவுன்—டோர் நெம்பர் 2/36, சர்வே நெம்பர் 1/6541 உள்ள தாதா முத்தியப்பன் தெருவிலிருக்கும் கவர்ன்மெண்ட் கட்டடத்தில் கடையை வைத்துக்கொள்ள வேண்டியது. இந்த கட்டடத்திற்கு குடிக்கூலி இனி தெரிவிக்கப்படும். கடையின் இஜாராதார் ஷை கடையை திறப்பதற்கு முந்தியாவது, பிந்தியாவது ஷை கவர்ன்மெண்ட் கட்டடத்தில் இடம் போதாதென்று தெரிந்தால் பக்கத்திலிருக்கும் நெ. 1/37 உள்ள லாயங்களை குடிக்கூலிக்கு பெற்று சேர்த்துக்கொள்ளலாம்.
7	ஜார்ஜு டவுன்—எழுகிணற்று தெரு ; வடக்கே ஸெயின்ட் ஸேவியர் தெருவிற்கும், தெற்கே அம்மன் கோவில் தெருவிற்கும் மத்தியில்.
8	ஜார்ஜு டவுன்—ஆனைகெவுனி ரோட் ; கிழக்கே கந்தப்ப முதலி தெருவிற்கும், மேற்கே வால்டாக்ஸ் ரோட்டிற்கும் மத்தியில்.
9	சிந்தாதிரிப்பேட்டை—கூவம் ஆறு ரோட் ; கிழக்கே சாமி நாயக்கன் தெருவிற்கும் தெற்கே அருணசல நாயக்கன் தெருவிற்கும் மத்தியில்.
10*	சூளை—அவதானம் பாப்பைய்யர் தெரு ; கிழக்கே சூளை கடை தெருவிற்கும், மேற்கே குறவன் குளத் தெருவிற்கும் மத்தியில் அல்லது விஜய விக்னேஸ்வரர் கோவில் தெரு, வடக்கே தர்மராஜா கோவிலுக்கும், தெற்கே சூளை கடைதெருவிற்கும் மத்தியில். [டிராம் வண்டி ஓடும் சூளை கடைத்தெருவில் கடையின் வாசற்படி இருக்கக்கூடாது.]
11	பெரியமெட்டு—இருசப்பன் தெருவில் அல்லது பெரியண்ண மேஸ்திரி தெருவில் எந்த இடத்திலாவது.
12	புதுப்பேட்டை—வடக்கே ஹாரிஸ் ரோட்டு, ஹாரிஸ் பாலத்திலிருந்து மதராஸ் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் குதிரை லாயம் வரைக்கும், கிழக்கும் தெற்கும் கூவம் ரோட், மேற்கே வேலாயுதச் செட்டி தெரு, ஹாரிஸ் ரோட்டிலிருந்து கூவம் ரோட் வரைக்கும் ; இந்தக்கடை மேற்சொன்ன நான்கெல்லைக்குள் ஆக்ஷேபனையில்லாத யாதொரு இடத்திலாவது வைத்துக்கொள்ளவேண்டியது. கம்மிஸேரியட் லயனுக்கு அருகாமையிலாவது அல்லது கூவம் ரோட் அல்லது ஹாரிஸ் ரோட்டுக்கு 50 கெஜ தூரத்திலாவது அல்லது வேலாயுத செட்டி தெரு வட கோடியிலாவது வைக்கக்கூடாது.

கடை நெம்பர். — எல்லைகள்.

13 நுங்கம்பாக்கம்—அகத்தீஸ்வரன் கோவில் தெரு அல்லது கிராமத் தெரு ; வடக்கே நுங்கம்பாக்கம் ஐரோட்டுக்கும், தெற்கே போலீஸ் ஸ்டேஷனுக்கும் மத்தியில்.

14 திருவல்லிக்கேணி—சி. என். கிருஷ்ணசாமி ரோட் ; கிழக்கே பெல்ஸ் ரோடுக்கும், மேற்கே பீகம் தெருவிற்கும் மத்தியில்.

15 திருவல்லிக்கேணி—புலிபோன் கடைத்தெரு, வாணிய தெருவில் எந்த இடத்திலாவது.

16 இராயப்பேட்டை—இராயப்பேட்டை ஐரோட் ; வடக்கே பீடர்ஸ் ரோட்டுக்கும் தெற்கே போலீஸ் ஸ்டேஷனுக்கும் மத்தியில்.

17 தேனம்பேட்டை—மவுண்ட் ரோட் ; வடக்கே புது மாம்பலம் ரோட்டிற்கும் (**New Mambalam Road**), தெற்கே போலீஸ் ஸ்டேஷனுக்கு மிடையில்.

18 மைலாப்பூர்—அப்பு முதலி தெரு ; வடக்கே கச்சேரி ரோட், தெற்கே மாதாகோவில் வீதிக்கும் மத்தியில் ; அல்லது கச்சேரி ரோட், கிழக்கே போலீஸ் லைனுக்கும், மேற்கே பக்கிங்ஹாம் கால்வாய் வாராவதிக்கும் மத்தியில்.

ஷெட்யூல் II.—டாவரன்கள்.

1 ராயபுரம்—பிரண்டன் பஞ்சு பிரஸ் ரோட்.

2 ஜார்ஜு டவுன்—ஏழுகிணற்று தெரு ; வடக்கே ஆனைக்கார கோனான் தெருவிற்கும் தெற்கே ஸெயின்ட் ஸேவியர் தெருவிற்கும் மத்தியில், அல்லது செயின்ட் ஸேவியர் தெருவு ; கிழக்கே ஏழுகிணற்று தெருவிற்கும் மேற்கே தங்கசாலைத் தெருவிற்கும் மத்தியில்.

3 ஜார்ஜு டவுன்—ஆதியப்ப நாயக்கன் தெரு ; கிழக்கே கோவிந்தப்ப நாயக்கன் தெருவிற்கும் மேற்கே தங்கசாலை தெருவிற்கும் மத்தியில்.

4 வேப்பேரி—வேப்பேரி ஐரோட் ; கிழக்கே ஸைடன்ஹாம் ரோட்டிற்கும் மேற்கே அட்கின்ஸன் ரோட்டுக்கும் மத்தியில்.

5 எழும்பூர்—கடையை சாமி ரெட்டி சந்தில் வைத்துக்கொள்ளலாம்.

6 திருவல்லிக்கேணி—பைகிராப்ட்ஸ் ரோட் ; கிழக்கே வீரராகவ முதலி தெருவிற்கும் மேற்கே திருவல்லிக்கேணி ஐரோட்டிற்கும் மத்தியில்.

7 மைலாப்பூர்—கச்சேரி ரோட் ; கிழக்கே போலீஸ்காரர் வசதிக்கும் மேற்கே பகிங்காம் கால்வாய் வாராவதிக்கும் இடையில்.

ஷெட்யூல் III.—கஞ்சாக்கடைகள்.

1 ஜார்ஜு டவுன்—மண்ணடி தெரு ; கிழக்கே மூர் தெருவிற்கும் மேற்கே ஐயப்ப செட்டி தெருவிற்கும் மத்தியில்.

2 ஜார்ஜு டவுன்—சைனாபஜார் ரோட் ; கிழக்கே தங்கசாலை தெருவிற்கும் மேற்கே வால்டாக்ஸ் ரோட்டுக்கும் மத்தியில்.

3 வண்ணாரப்பேட்டை—திருவொற்றியூர் ஐரோட் ; வடக்கே இராமானுஜ ஐயர் தெருவிற்கும் தெற்கே கல்லறை ரோட்டிற்கும் மத்தியில்.

4 சூளை—டிமெல்லோஸ் ரோட்டில எங்கேயாவது.

5 திருவல்லிக்கேணி—பைகிராப்ட்ஸ் ரோட் ; கிழக்கே வீரராகவ முதலி தெருவிற்கும், மேற்கே பங்கி சாயபு தெருவிற்கும் மத்தியில்.

6 புரசவாக்கம்—புரசவாக்கம் ஹைரோட்டில கங்காதரீஸ்வரர் கோயிலுக்கும் மூக்காத்தாள் தெருவிற்கும் மத்தியில்.

7 ராயப்பேட்டை—பீட்டர்ஸ் ரோட்டில் ராயப்பேட்டை ஹைரோட்டிற்கும் திருவல்லிக்கேணி ஹைரோட்டிற்கும் மத்தியில்.

8 புதுப்பேட்டை—ஹாரிஸ் வாராவதிக்கும் எழும்பூர் போலீஸ் கோர்ட்டுக்கும் மத்தியில்.

ஷெட்யூல் IV.—அபினிக்கடைகள்.

1 வண்ணாரப்பேட்டை—திருவொற்றியூர் ஐரோட் ; வடக்கே இராமானுஜ ஐயர் தெருவிற்கும், தெற்கே கல்லறை ரோட்டிற்கும் மத்தியில்.

2 ஜார்ஜு டவுன்—(1) வரதா முத்தையப்பன் தெரு ; வடக்கே, அண்ணா பிள்ளை தெருவிற்கும், தெற்கே ஆதியப்ப நாயக்கன் தெருவிற்கும் மத்தியில், அல்லது (2) ஆதியப்ப நாயக்கன் தெரு ; கிழக்கே வரதா முத்தையப்பன் தெருவிற்கும் மேற்கே தங்கசாலை தெருவிற்கும் மத்தியில்.

3 சூளை—பாரக்ஸ் கேட் தெரு அல்லது டிமெல்லோஸ் ரோட்டில் எந்த இடத்திலாவது.

4 திருவல்லிக்கேணி—பைகிராப்ட்ஸ் ரோட் ; கிழக்கே திருவல்லிக்கேணி ஐரோட்டிற்கும், மேற்கே அமீர் மஹாலுக்கும் மத்தியில்.

(1) ஏலம் நடந்துக்கொண்டிருக்கையில் எவருடைய ஏலத தொகை விலை அப்போதைக்கு ஏற்றுக்கொள்ளப்படுகிறதோ அவர் விற்பனை செய்யும் உத்தியோகஸ்தர் உத்தரவுபண்ணும் பட்சத்தில் உடனேயும், இல்லாவிட்டால் விற்பனை தினத்தின் அந்தியத்தில் முதலில் கட்டும் டேவணி இரண்டு மாதக் குத்தகைத் தொகைக்கு சமமாகவாவது அதிகமாகவாவது இருந்தாலொழிய ஒவ்வொரு கடைக்கும் ஏலம் கேட்கிறதற்கு கட்டிய டிபாசிட்டுத் தொகை ரூபாய் 50 தவிர அரை மாதத்திய குத்தகைத் தொகை டேவணியாக செலுத்தவேண்டியது. அப்படி கட்டாவிட்டால் அவர் கட்டிய டேவணித் தொகை அவரால் இழந்துவிடப்பட்டு, அந்த கடை மேற்சொல்லிய நிபந்தனைகளை அனுசரித்து உடனே ஏலம் போடப்படும், அல்லது கலெக்டரால் வேறே எவ்விதமாயாவது வினியோகஞ் செய்யப்படும். அப்படி டேவணி கட்டத் தவறினவன் அதே கடைக்காவது அல்லது வேறு எந்த கடைக்காவது ஏலத்தில் மறுபடியும் விலை கேட்பதற்கு யோக்கியதையில்லாதவராய்விடுவார். இந்தப்படி மறு ஏலம் போடுவதில் நஷ்டம் நேரிட்டால் அதற்காக மேற்சொல்லியபடி தவறிப்போனவன் உள்ளாகவேண்டியது. லாபம் நேரிட்டால் அது ஒன்றும் அவனுக்குச் சேராது. நஷ்டம் உண்டானால் ஷை தவறினவன் முதல் ஏல விற்பனை ஷரத்தின்படி தவணை முழுமைக்கும் செலுத்தவேண்டிய பூரா தொகைக்கும் மறு ஏல விற்பனையின் கிரயத்திற்கு கொண்டவனால் செலுத்தப்படத்தக்க பூரா தொகைக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதோ அதைக் கட்டிக்கொடுக்கவேண்டியது.

(2) மேற்கண்ட ஷெட்யூல்களில் குறிக்கப்பட்டிருக்கும் எல்லைகளுக்குள், யாதொரு ஆக்ஷேபனையில்லாத இடத்தில்தான் ஏலத்தில் கடை எடுத்தவர்கள் தங்கள் கடைகளை வைத்துக்கொள்ள உத்திரவு கொடுக்கப்படும். தவிர, கடைகள் ஒன்றுக்கொன்று 100 கஜம் தூரத்திற்குள்ளாக இருக்கக்கூடாது.

(3) (a) ஏலத்தில் எவனுடைய விலை அப்போதைக்கு அங்கீகரிக்கப்படுகிறதோ அந்த ஒவ்வொருவனும்,

(i) விற்பனை செய்யும் உத்தியோகஸ்தர் உத்திரவு செய்யும் பக்ஷத்தில் உடனேயும் இல்லாவிட்டால் விற்பனை தினத்தின் அந்தியத்திலும், முதலில் கட்டிய டேவணி இரண்டுமாதக் குத்தகைத் தொகைக்கு சமமாகவாவது அதிகமாகவாவது இருந்தாலொழிய, ஒவ்வொரு கடைக்கும் (1-வது பிரிவில் கண்டபடி கட்டிய டிபாசிட்டைத் தவிர) பாதி மாதத்தியக் குத்தகைத் தொகை டேவணியாய் கட்டவேண்டியது ; மேலும்,

(ii) அவனுடைய விலை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற ஒவ்வொரு கடைக்கும் லைஸென்ஸு கொடுப்பதற்கு உடனே மனு செய்து கொள்ளவேண்டியது. ஏலம் கடந்த ஒரு வாரத்துக்குள் கடையை ஸ்தாபிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிற ஜாகாவின் எல்லைகளை எக்ஸைஸ் இன்ஸ்பெக்டரிடமும் அவனுடைய ஸ்தாவர சொத்துக்களின் விபரத்தைக் காண்பிக்கும் கலெக்டர் ஆபீஸில் கொடுக்கப்படும் பாரத்தில் ஒரு நமூனாவை கலெக்டரிடம் அனுப்பவேண்டியது. ஷை நமூனாவில் அவனுக்கு சொந்தமாவது அல்லது எவ்வித பாத்தியமாவது உள்ள ஸ்தாவர சொத்துக்களும் அவைகளின் மேலுள்ள வில்லங்கங்கள் முதலியவைகளுடைய விபரங்களையும் சரியாயும் பூராவாயும் குறித்திருக்கவேண்டும்.

(iii) விற்பனை தினத்திலிருந்து பதினைந்து தினங்களுக்குள் மேல்கண்ட (i) பிரிவில் கண்டபடி ஏற்கனவே கட்டிய டிபாசிட்டுகள் போக எவ்வளவு தொகை செலுத்தினால் ஏலமெடுத்த கடைகள் யாவத்துக்கும் இரண்டு மாதத்திய குத்தகைத் தொகையாகுமோ அவ்வளவு தொகையை டேவணியாகக் கட்டவேண்டியது.

(b) மேலும், அவன் கிஸ்திகளை பூராவும் தவருமலும் கட்டத் தகுந்தவனென்று கலெக்டருக்கு நம்பிக்கை ஏற்படாவிட்டால் மேலே சொல்லிய (a), (iii) பிரிவில் கண்ட டேவணித் தொகையை கட்டுவதோடுகூட கீழே (i), (ii), (iii), (iv) பிரிவுகளில் கண்ட பிரகாரம் நடக்கும்படி தாசில்தார் உத்தரவு செய்யலாம் :—

(i) ஏலமெடுத்த கடைகள் யாவத்துக்கும் இரண்டு மாதத்திய குத்தகை தொகையை டேவணி கட்ட வேண்டுமென்றுவது, அல்லது

(ii) காண்ட்ராக்டின் ஷரத்துகளின்படி அவனால், சேரவேண்டிய எல்லாத் தொகைகளையும் செலுத்தத் தவறினால், அவனுடைய ஸ்தாவர சொத்துக்களை விற்கும் அதிகாரத்தை அடமானம் வைத்துக்கொள்பவருக்கு உட்படுத்தி அவனுடைய ஸ்தாவர சொத்துக்களை கவர்ன்மெண்டுக்கு ஷை தொகை முழுவதிற்கும் அடமானமாகவைத்து ஒரு அடமான பத்திரம் எழுதிக்கொடுக்கும்படிக்காவது, அல்லது

(iii) கலெக்டரால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஜாமீன்தாரர் அல்லது ஜாமீன்தாரர்களைக் கொண்டு ஷை கடைகளின் காண்ட்ராக்ட் ஷரத்துகளின்படி அவனால் சேரவேண்டிய எல்லா தொகைகளையும் கிரமப்படி செலுத்தவேண்டிய நிமித்தமாய் ஒரு ஜாமீன் பத்திரமும், விக்கிரயம் பெற்றவன் ஷை காண்ட்ராக்டின்படி செலுத்தவேண்டிய எல்லா தொகைகளுக்கும் ஷை ஜாமீன்தாரர் அல்லது ஜாமீன்தாரர்களுடைய ஸ்தாவர சொத்துக்களை கவர்ன்மெண்டுக்கு அடமானமாகவைத்து ஒரு அடமானப் பத்திரமும் எழுதிக்கொடுக்கும்படி செய்விக்கவேண்டியது. ஷை அடமான பத்திரத்தில், ஜாமீன்தாரர் அல்லது ஜாமீன்தாரர்களாவது விக்கிரயம் பெற்றவனாவது மேல் சொல்லிய தொகைகளைக் கொடுக்கத் தவறினால் ஷை சொத்துக்களை விற்கும் அதிகாரத்தை அடமானம் வைத்துக்கொள்ளுபவருக்கு உட்படுத்தி எழுதப்படும், அல்லது

(iv) அடமானம் வைக்கப்பட்ட ஸ்தாவர சொத்துக்களின் கிரயம் போதுமானதென்று கலெக்டருக்கு நம்பிக்கை ஏற்படாவிட்டால், விக்கிரயம் பெற்றவனுடைய ஸ்தாவர சொத்தை அடமானம் வைப்பதோடுகூட, செலுத்தவேண்டிய பாக்கிதொகைக்கு, கலெக்டரால் அங்கீகரிக்கப்பட்ட ஜாமீன்தாரர் அல்லது

ஜாமீன்தாரர்களைக்கொண்டு ஒரு ஜாமீன் பத்திரமும், அந்த ஜாமீன்தாரர் அல்லது ஜாமீன்தாரர்கள் ஸ்தாவர சொத்தை கவர்ன்மென்டுக்கு அடமானம் வைத்து அடமான பத்திரமும் எழுதிக்கொடுக்கும்படி கலெக்டர் உத்திரவளிக்கலாம். மேல்சொன்ன (iii), (iv) பிரிவில் கண்ட ஜாமீன்தாரர்கள் ஸ்தாவரசொத்துக்களின் விபரத்தைக் காண்பிக்கும் (போர்ட் ஆப் ரெவினியு (செப்ரேட் ரெவினியு) நெ. 1, 1938-ம்ஸ்ரீ ஜனவரிமீ 22வயுள்ள நோடிபிகேஷனுக்கு சேர்க்கப்பட்டிருக்கிற) குறிப்பிட்ட பாரத்தில் ஒரு நமூனாவை கலெக்டருக்கு அனுப்பவேண்டும். மேல் உள்ள (i) முதல் (iv) பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளை விக்கிரயம் பெற்றவன் விற்பனை தினத்திலிருந்து 15 தினங்களுக்குள் நிறைவேற்ற கடமைப்பட்டவனாவான். மேல் சொல்லிய ஜாமீன் பத்திரத்தையும் அடமான பத்திரங்களையும் ஸ்டாம்பு ஒட்டி விக்கிரயம் பெற்றவனுடைய செலவில் ரிஜிஸ்டர் செய்விக்கப்படும். விக்கிரயம் பெற்றவன் முச்சலிக்காய் உடன்படிக்கை செய்ய பிணைக்கப்படுவான்.

(c) விக்கிரயம் பெற்றவன் மேலே (iv)-வது பிரிவின்படி டேவணி செலுத்தத் தவறினாலும், லைசென்ஸுக்கு மனு செய்து கொள்ளத்தவறினாலும், அந்த பிரிவின்படி போடப்பட்ட உத்திரவின்படி நடந்துக்கொள்ளாவிட்டாலும் அல்லது முச்சலிக்கை எழுதிக்கொடுக்கத் தவறினாலும் முன்னமே கட்டிய டேவணித் தொகைகள் அவனால் இழந்துவிடப்பட்டு அந்தக்கடை மறுயேலம் போடப்படும் அல்லது கலெக்டரால் வேறுவிதமாய் வினியோகிக்கப்படும். இந்த பிரிவின்படி மறுயேலம் போடுவதில் நஷ்டம் நேரிட்டால் அதற்காக மேற்சொல்லியபடி தவறிப்போனவன் உள்ளாகவேண்டியது ; லாபம் நேரிட்டால் அது ஒன்றும் அவனுக்குச் சேரமாட்டாது ; நஷ்டம் உண்டாகும்போது அவன் முதல் ஏல விற்பனை ஷரத்தின்படி த்வணை முழுமைக்கும் செலுத்த வேண்டிய பூராத் தொகைக்கும், மறு ஏல விற்பனையில் கிரயத்துக்குக் கொண்டவனால் செலுத்தப்படத்தக்க பூராத் தொகைக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறதோ அதைக் கட்டிக் கொடுக்கவேண்டியது. அப்படி மறு ஏலத்தில் நஷ்டம் நேரிடுகிற விஷயத்திலே மேற்சொல்லியபடி இழந்துவிடப்பட்ட டேவணித்தொகைகள் மறு ஏல விற்பனையினாலுண்டாகும் நஷ்டத் தொகையிலிருந்து கழிக்கப்பட்டு மிகுதி நஷ்டம் ஏதாவதிருந்தால் அது லாண்ட் ரெவினியு பாக்கியாயிருந்தால் எப்படியோ அப்படியே மேற்சொல்லியபடி தவறினவனிடத்திலிருந்து வசூல் செய்யப்படும். இழந்து விடப்பட்ட அந்த டேவணித்தொகைகள் மறு ஏல விற்பனையினாலுண்டாகும் நஷ்டத்தொகைக்கு அதிகப்பட்டிருந்தால் அந்த டேவணித்தொகைகள் முழுவதும் ஸர்க்கார் தாக்கல் செய்துவிடப்படும். மறு ஏலம் போடுவதன்றி வேறே விதமாய் கடை அல்லது இஜாரா வினியோகிக்கப்பட்டால் அதனால் உண்டாகும் நஷ்டத்திற்கும் மேற்கூறியபடி தவறிப்போனவன் உள்ளாகவேண்டியது. மறு ஏலமின்றி வேறுவிதமாய் வினியோகமென்பது கடை அல்லது இஜாரா மூடுவதும் உள்பட்டதாகும்.

(4) விசேஷ காரணங்களிருந்தாலொழிய டெம்பரரி லைஸென்ஸு கொடுக்கப்படமாட்டாது ; அதிலும் வருஷத்திய லைஸென்ஸு கொடுக்கப்படாமலிருப்பதற்கு காரணம், லைஸென்ஸுதாரர் மேற்கண்ட நிபந்தனைகளின்படி செய்யத் தவறியதனாலென்று ஏற்படும்பட்சத்தில், அவர்களுக்கு டெம்பரரி லைஸென்ஸு ஒருக்காலும் கொடுக்கப்படமாட்டாது.

(5) கடை கிஸ்தி முதலியவை செலுத்தவேண்டிய விஷயத்தில் அடியிற்கண்டிருக்கும் விதிகள் அனுஷ்டிக்கப்படும் :—

(i) கடை கிஸ்தி முதலியவை ஒவ்வொரு மாதமும் 10வ அல்லது அதற்கு முந்தியாவது அட்வான்சாக செலுத்தப்பட வேண்டியது.

(ii) அப்படி செலுத்தத் தவறுகிற எல்லாத்தொகைகளுக்கும் 10வ முதல் மாதம் 1-க்கு ரூபா 1-க்கு 1 பை வீதம் வட்டி வசூல் செய்யப்படும்.

(iii) 10வக்கு அப்புறம் செலுத்தும் கிஸ்தி துகைக்கு அடியிற்கண்டபடிக்கு அபராதம் விதிக்கப்படும் :—

ரூ. 20-க்கு கீழ்பட்டால்	ரூ. 1 அபராதம்.
ரூ. 20-லிருந்து 50 ரூபாய்க்குள் ..	ரூ. 2 ,,
ரூ. 50-லிருந்து 100 ரூபாய்க்குள் ..	ரூ. 3 ,,
ரூ. 100-லிருந்து 200 ரூபாய்க்குள் ..	ரூ. 6 ,,
ரூ. 200-லிருந்து 400 ரூபாய்க்குள் ..	ரூ. 12 ,,
ரூ. 400-லிருந்து 800 ரூபாய்க்குள் ..	ரூ. 24 ,,
ரூ. 800-லிருந்து 1,500 ரூபாய்க்குள்.	ரூ. 40 ,,
ரூ. 1,500-லிருந்து 2,500 ரூபாய்க்குள்.	ரூ. 50 ,,
ரூ. 2,500-லிருந்து 4,000 ரூபாய்க்குள்.	ரூ. 75 ,,
ரூ. 4,000-லிருந்து 6,000 ரூபாய்க்குள்.	ரூ. 100 ,,
ரூ. 6,000	ரூ. 150 ,,

(6) ஒவ்வொரு மாதமும், கிஸ்து முதலியவை கொடுபடாமலிருக்கிற எல்லா கடைகளும் அந்தந்த மாதம் 25வ அல்லது கஜானா மாதக் கணக்கு பைசல் செய்யும் தினம், இதில் எந்த நாள் முந்தியதோ அன்று மறு ஏலம் போடப்படும். அந்த தேதி கவர்ன்மெண்டு விடுமுறை நாளானால் அதற்குமுன் ஆபீசு தினம் ஏலம் நடத்தப்படும்.

(7) சென்னை சட்ட நிர்வாக சபை, சென்னை சட்ட நிருபண சபை, சென்னை முனிஸிபாலிடி இவைகளுக்கு எலெக்ஷன் செய்யும் தினங்களில், போலிங் ஸ்டேஷனுக்கு மூன்று மைல் விஸ்தீர்ணத்திற்குள்ளிருக்கும் எல்லா பட்டைசாராயக் கடைகள், கஞ்சா கடைகள், அபினிக் கடைகள், டாவரன்கள் இவைகளை மூடிவிடவேண்டியது.

(8) * இந்த குறிப்பிட்ட கடைகளை மில்லில் வேலை நாள்களில் காலை 11-30 மணி முதல் மாலை 1-மணி வரையிலும் சம்பளம் பட்டுவாடா செய்யும் தினங்களில் காலை 11-30 மணி முதல் மாலை 1-மணி வரையிலும், சாயரட்சை ஷை 4 மணி முதல் 10 மணி வரையிலும், ஞாயிற்றுக்கிழமை தினங்களிலும் பிரம்பூர் மில் விடுமுறை தினங்களிலும் காலை 11-30 மணி முதல் மாலை 4 மணி வரையிலுள்ள நேரத்தை தவிர பாக்கி காலங்களிலும் மூடிவிடவேண்டியது. மில் விடுமுறை நாட்களாவன :— மாளைய அமாவாசை, தீபாவளி, நோன்பு, கிரிஸ்மஸ், இங்கிலீஷ் வருஷப்பிறப்பு, பொங்கல், மாட்டுப்பொங்கல், தெலுங்கு வருஷப்பிறப்பு, தமிழ் வருஷப்பிறப்பு, பிள்ளையார் சதுர்த்தி.

(9) ஒரு மாதத்திற்கு அபினி கடைகளுக்கு அடியில் கண்ட அளவு அபினி கொடுக்கப்படும் :—

அபினி கடை நெ.	1	20 சேர்
,,	2	32 ,,
,,	3	19 ,,
,,	4	30 ,,

(10) ஒரு மாதத்திற்கு கஞ்சா கடைகளுக்கு அடியில் கண்ட அளவு கஞ்சா கொடுக்கப்படும் :—

கஞ்சா கடை நெ.	1	40 சேர்
,,	2	70 ,,
,,	3	55 ,,
,,	4	40 ,,
,,	5	50 ,,
,,	6	40 ,,
,,	7	40 ,,
,,	8	40 ,,

சென்னை ராஜதானிப் பட்டணத்திலுள்ள சாராயக் கடைகளையும் அன்னிய மதுக் கடைகளையும் ஒருவகை செய்வது விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதைக் குறித்த விசேஷ திட்டங்கள்.

(1) 1938-ம்ஸ்ரீ எப்ரல்மீ 1வயிலிருந்து ஆரம்பித்து 1939-ம்ஸ்ரீ மார்ச்மீ 31வயோடு முடிவாகும 12 மாத காலத்துக்காக சென்னை ராஜதானிப்பட்டணத்திலுள்ள சாராயக்கடைகளும் அன்னிய மதுக் கடைகளும் (டாவர்ன்களும்)—

(i) டெண்டர் மூலமாக, அல்லது

(ii) பகிரங்க ஏல விற்பனை மூலமாக ஒருவகை செய்யப்படுமென்று இதனால் அறிக்கையிடப்படுகிறது.

(2) போடு ஆவ் ரெவின்யூ (சபரேட் ரெவின்யூ) நெ. 2, 1938-ம்ஸ்ரீ ஜனவரிமீ 22வயுள்ள விளம்பரத்தில் ஏல விற்பனையைக் குறித்து நிர்ணயிக்கப்பட்டிருக்கும் திட்டங்களுக்குட்பட்டு சென்னை கலெக்டரானவர் சென்னையிலுள்ள கலெக்டர் ஆபீஸில் 1938-ம்ஸ்ரீ பிப்ரவரிமீ 18வ ஏல விற்பனை நடத்துவார். ஏல விற்பனை பகல் 12 மணிக்கு ஆரம்பமாகும்.

(3) தனித்தனியான சாராயக்கடைகளுக்காகவாவது அன்னிய மதுக்கடைகளுக்காகவாவது மூடி முத்திரை போட்டு அனுப்பப்படும் டெண்டர்களைக் கலெக்டர் தம்முடைய ஆபிஸில் 1938-ம்ஸ்ரீ பிப்ரவரிமீ 16வ பகல் 12 மணி வரையில் பெற்றுக் கொள்வார்.

(4) ஒவ்வொரு டெண்டரிலும் டெண்டர் செய்பவர் கிரமமாய்க் கையெழுத்து செய்திருக்கவேண்டியதுமல்லாமல் அடியிற்கண்ட விவரங்களும் அடங்கியிருக்கவேண்டும் :—

(i) டெண்டர் செய்பவரின் பெயரும் மேல் விலாசமும் ;

(ii) குறிப்பிட்ட எந்த சாராயக்கடைக்காக அல்லது அன்னிய மதுக்கடைக்காக டெண்டர் செய்யப்படுகிறதோ அதன் நம்பரும் பெயரும் ;

மேலும், (iii) ஷை சாராயக்கடைக்காக அல்லது அன்னிய மதுக்கடைக்காக டெண்டர் செய்யப்படும் தொகை எழுத்திலும், இலக்கத்திலும்.

ஒவ்வொரு டெண்டரும் அடங்கியுள்ள லகோடாவின்மேல் (கவரின்மேல்) சந்தர்ப்பத்துக்கேற்ற பிரகாரம் அடியிற்கண்டபடி எழுதவேண்டும் :—

“ சாராயக்கடைக்காக அல்லது அன்னிய மதுக் கடைக்காக டெண்டர்.”

ஆனுல், டெண்டர் செய்பவரின் பெயரையாவது, எந்த சாராயக்கடைக்காக அல்லது அன்னிய மதுக்கடைக்காக டெண்டர் செய்யப்படுகிறதோ அதன் நம்பரையாவது லகோடாவின்மேல் குறிப்பிடக்கூடாது.

(5) ஒன்றுக்கு மேற்பட்ட சாராயக்கடைகளுக்காக அல்லது அன்னிய மதுக்கடைகளுக்காக டெண்டர் செய்யப்பட்டால், அவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக டெண்டர் கொடுக்கவேண்டும்.

(6) திட்டத்துக்குள்பட்ட டெண்டர்கள் ஒப்புக்கொள்ளப்படமாட்டா.

(7) யாதொரு நபர் மற்றொருவருக்காக வகாலத்துநாமா பெற்றிருந்தாலன்றி மற்றப்படி, அவருக்காக டெண்டர் செய்யக்கூடாது. இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நபர்களின் பெயரில் செய்யப்படும் டெண்டரை அனுசரித்து எந்தக் கடையும் விலைக்கு விடப்படமாட்டாது. கிரமமாய் அங்கீகரிக்கப்பட்ட கம்பெனியாரின் அல்லது பர்ம் என்னும் வர்த்தகக் கூட்டத்தாரின் விஷயத்தில், வகாலத்துநாமா மூலமாகக் கிரமமாய் அதிகாரம் பெற்றிருக்கும் ஒரு ஏஜெண்டாவது (Articles of Association) ஆர்டிகில்ஸ் ஆவ் அஸோஸியேஷன் என்னும் நிபந்தனைகளினுலாகிலும் அவைகளைப்போன்ற விதிகளினுலாகிலும் அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் ஒரு உத்தியோகஸ்தராவது ஷை கம்பெனியாருக்காக அல்லது வர்த்தகக் கூட்டத்தாருக்காக டெண்டர் செய்து அவர்கள் சார்பில் பிரவர்த்திக்கலாம்.

(8) டெண்டர் செய்பவர் சென்னை ராஜதானிப்பட்டணத்தில் தாம் டெண்டர் செய்ய விரும்பும் ஒவ்வொரு சாராயக்கடைக்காகவும் அல்லது அன்னிய மதுக்கடைக்காகவும் சென்னை தாலூகா ட்ரெழரியில் (கஜானுவில்) 50 ரூபாய் டிபாசிட் செய்யவேண்டும். மேலும், அவர் அந்தப்படி டிபாஸிட் செய்திருப்பதற்கு அத்தாட்சியாக தம்முடைய டெண்டருடன் ட்ரெழரி சலானையும் சேர்த்து அனுப்பவேண்டும்.

(9) டெண்டர் செய்பவர் தாம் எந்த சாராயக்கடைக்காக அல்லது அன்னிய மதுக்கடைக்காக டெண்டர் செய்திருக்கிருரோ அதை ஏலம் போடும்போது ஹாஜராயிருக்கவேண்டும். ஏலம் போடும் இடத்திற்கு போவதற்காக, அவர் ஏலம் போடும் அறைக்குள் பிரவேசிப்பதற்குரிய பாஸை ஹாஜர்படுத்தவேண்டும். இந்தப் பாஸானது எந்த ட்ரெஷெரியில் ஷை டிபாஸிட் செய்யப்படுகிறதோ அந்த ட்ரெஷெரியின் விசாரணை வகிக்கும் உத்தியோகஸ்தரால் கொடுக்கப்படும். டெண்டர் செய்பவர்கள் அப்படிப்பட்ட பாஸுகளை ஹாஜர்ப்படுத்தினுல், அவர்கள் முதலில் கட்டவேண்டிய டிபாசிட்டை மறுபடியும் கட்டாமல் ஏலத்தில் விலை கேட்கலாம்.

(10) ஏலம் ஆரம்பமாகும் வரையில் டெண்டர்கள் திறக்கப்படமாட்டா. யாதொரு டெண்டர் எந்த சாராயக்கடைக்கு அல்லது அன்னிய மதுக்கடைக்கு சம்பந்தப்படுகிறதோ அதற்காக ஷை ஏலத்தில் கடைசியாய் விலை கேட்கிறவரையில் அது பிரசித்தம் செய்யப்படவுமாட்டாது, பகிரங்கப்படுத்தபடவுமாட்டாது, ஆலோசிக்கப்படவுமாட்டாது.

(11) ஒவ்வொரு சாராயக்கடையும் அல்லது அன்னிய மதுக்கடையும் தனித்தனியாய் ஏலம் போடப்படும். யாதொரு சாராயக்கடைக்காக அல்லது அன்னிய மதுகடைக்காக ஏலத்தில் முடிவாய் விலை கேட்கப்பட்ட பிறகு, விற்பனை செய்யும் உத்தியோகஸ்தர் தமக்கு யுக்தமாக தோற்றுகிறபடி அந்தக்கடையை மேலேகண்டபடி விலை கேட்டிருப்பவருக்கு அங்காமியாக விட்டுவிடலாம். ஆனுல், அந்தப்படி விட்டுவிடுவதானது ஷை சாராயக்கடைக்காக அல்லது அன்னிய மதுக்கடைக்காக முன்னதாய் டெண்டர்கள் எவையேனும் வரப்பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் அவைகள் ஆலோசிக்கப்படுவதற்கு உட்பட்டதாகும். அதன் பிறகு, விற்பனை செய்யும் உத்தியோகஸ்தர் வரப்பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் டெண்டர்களைப் பரிசோதிப்பார். அவர் தமக்கு யுக்தமாய்த் தோற்றுகிறபடி போர்ட் ஆப் ரெவின்யூ (சபரேட் ரெவின்யூ) நெ. 2. 1938-ம் ஜனவரி 22உயுள்ள விளம்பரத்தில் ஏல விற்பனையைக் குறித்து நிர்ணயிக்கப்பட்டிருக்கும் திட்டங்களில் கண்ட ஹேதுக்களில் எதன்மேலாகிலும் யாதொரு டெண்டரைப்பற்றி ஆலோசிக்க மறுத்துவிடலாம். ஒப்புகொள்ளப்படலாமென்று விற்பனை உத்தியோகஸ்தரால் கருதப்படும் மிகவும் உயர்ந்த டெண்டர் தொகையானது, ஏலத்தில் கேட்கப்பட்டதாய் ஒப்புக்கொள்ளப்படத்தக்க மிகவும் உயர்ந்த விலையை விட அதிகமாயிருந்தால் விற்பனை செய்யும் உத்தியோகஸ்தரானவர் கலெக்டரால் பின்பு ஊர்ஜ்ஜிதம் செய்யப்படுவதற்குட்பட்டு, பிரஸ்தாப சாராயக் கடையையாவது அன்னிய மதுக்கடையையாவது ஷை தொகையை டெண்டர் செய்திருப்பவருக்கு அங்காமியாக விட்டுவிடலாம். கலெக்டர் தமக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி எந்த டெண்டரையாகிலும் ஒப்புக்கொள்ளவோ தள்ளிவிடவோ அதிகாரம் உள்ளவராவார். ஷை சாராயக்கடைக்காகவாவது அன்னிய மதுக்கடைக்காகவாவது டெண்டர் எதுவும் விற்பனை செய்யுங் உத்தியோகஸ்தரால் வரப்பெற்றுக் கொள்ளப்படாதிருந்தால் அல்லது ஒப்புக்கொள்ளப்படாதிருந்தால், ஏலத்தில் கேட்கப்பட்டதாய் ஒப்புக்கொள்ளப்படத்தக்க மிகவும் உயர்ந்த விலையை அந்த உத்தியோகஸ்தர் ஏற்கெனவே அங்காமியாக ஒப்புக்கொண்டிருப்பதானது ஏல விற்பனையைக் குறித்த திட்டங்களின் நிபந்தனை கண்டிருக்கிறபடி கலெக்டரால் ஊர்ஜ்ஜிதம் செய்யப்படுவதற்குட்பட்டு முடிவாய் நிற்கும்.

(12) டெண்டர் ஒப்புக்கொள்ளப்படாவிட்டால், டெண்டர் செய்பவர் டிபாஸிட் செய்திருக்கும் தொகையானது விண்ணப்பம் செய்துகொள்ளப்படுவதன்மேல் காலக்கிரமத்தில் அவருக்குத் திருப்பிக் கொடுத்துவிடப்படும்.

(13) யாருடைய டெண்டர் விற்பனைசெய்யும் உத்தியோகஸ்தரால் அங்காமியாய் ஒப்புக்கொள்ளப்படுகிறதோ அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் போர்ட் ஆப் ரெவின்யூ (சபரேட் ரெவின்யூ) பிறப்பித்திருக்கும் விளம்பரத்தில் ஏல விற்பனையை குறித்து நிர்ணயிக்கும் திட்டங்களின்படி நடந்துசொள்ளக் கடமைப்பட்டவராவார். பிரஸ்தாப சாராயக் கடைக்காக அல்லது அன்னிய மதுக்கடைக்காகக் கொடுக்கப்படும் லைஸென்ஸுக்குச் சம்பந்தப்பட்ட திட்டங்கள் அந்த விளம்பரத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

எஸ். வி. ராமமூர்த்தி,
கலெக்டர்.

மதராஸ், 1938-ம் ஜனவரி 28உ.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.